TAMIL

# மறுபிறப்பு செய்தி

Rebirthday Message





**R. ஸ்டான்லி**





தேவனது கிருபையால் 1962 நவம்பர் 18 அன்று கல்லூரியில் புகுந்த 16 வயதினிலே நான் மறுபடி பிறந்தேன். எனது சொந்தவூராகிய நாசரேத்தில் என்னைக் கிறிஸ்துவிடம் வழிநடத்தி வளர்த்த எனது ஆசிரியர்களான T. மைக்கல் செல்லத்துரை (1933-2003) அவர்களையும், D.P. ஞானதுரை (1941-2005) அவர்களையும் நன்றியுடன் நினைவுகூருகிறேன். முதன்முதலாக ஒரு கன்வென்ஷனில் நான் சாட்சி கொடுத்தபோது கிறிஸ்துவுக்கு வாலிபர் (Youth For Christ) இயக்கத்தின் ஆசியா தலைவர் Dr. J. விக்டர் மனோகரம் (1923-1999) அவர்கள் கூறியது: ''முதியவர் ஒருவர் இரட்சிக்கப்பட்டால் அவரது ஆத்துமா மட்டுமே காப்பாற்றப்படுகிறது; ஓர் இளைஞன் இரட்சிக்கப்பட்டாலோ அவனது வாழ்க்கையே காப்பாற்றப்படுகிறது!'' (பிர 12:11). 1960களில் இருந்த ஆயிரக்கணக்கான வாலிபரில் *''என்னையா தேடினீர், ஐயா, இயேசு நாதா?''* என்ற வியப்பிலிருந்து நான் இன்னும் வெளிவரவில்லை! இத்தனை ஆண்டுகளும் என்னைத் தமது வல்லமையால் காப்பாற்றியும் தமது மகிமைக்காய்ப் பயன்படுத்தியும் வருகிற தேவனுக்குமுன் இன்று எனது ***57ஆம் மறுபிறப்பின் நாள்*** அன்று நன்றிக் கண்ணீருடன் நெடுஞ்சாடையாய் வீழ்கிறேன். உங்கள் ஜெபங்களினால் என்னைத் தாங்கும் உங்களைக் கரங்குலுக்குகிறேன். எனது ஓட்டத்தை மகிழ்வுடன் முடிக்கத் தொடர்ந்து உங்கள் ஜெபம் எனக்குத் தேவை (அப் 20:24). *''மறுபிறப்பு என்றால் என்ன?''* என்ற வேதபாடக் குறிப்பு ஒன்றை இத்துடன் இணைத்திருக்கிறேன். ஏற்றவிதமாய்ப் பயன்படுத்துங்கள்; பிறருக்கும் அனுப்பி வையுங்கள். நன்றி!